
உ

கணபதி துணை.

கதிரைமலைப்


பேரின்பக் காதல்.



சரஸ்வதி புத்தகசாலை,
ஜிந்தும்பிட்டித் தெரு,
கொழும்பு.

ஸ்டான்ஸ் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை | 1934.



ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரம்

உ

கணபதி துணை.



கதிரைமலைப்

பேரின்பக் காதல்.

விநாயகர் துதி.

வேதக் கதிரைமலை வேலவரைத் தெண்டனிட்டுக்
காதல்சொல்லத் தந்திமுகக் கற்பகமுங் காப்பாமே.

சுப்பிரமணியர் துதி.

சீராருந் தென்கதிரைச் செவ்வே ளருளாலே
பாராருங் காதலிசை பாடத் துணிந்தேனே.

தோத்திரமாங் காதல்தன்னிற் சொற்பிழைகள் குற்றமெல்லாந்
தீர்த்தருளச் சண்முகனைத் தெண்டனிட்டுக் கொண்டேனே.

சிவபெருமான் துதி.

சங்கத் தமிழ்தெரிந்து தாரணியிற் காதல்சொல்லத்
திங்கட் சடிலமுடித் தேவுமருள் தந்திடுமே.

உமாதேவியார் துதி.

பன்னுதமி ழாலே பரிந்தடியேன் காதல்சொல்ல
வன்னையுமை யென்னைவளர்த் தாதரவு செய்திடுமே

திருமால் துதி.

தீதகற்றுந் தென்கதிரைச் செவ்வே ளருளதனாற்
காதல்சொல்லச் செங்கமலக் கண்ணனருள் தந்திடுமே.

பிரமன் துதி.

பரமதிருத் தமிழாற் பாருலகிற் காதல்சொல்லப்
பிரமன் கருணைவெள்ளம் பெருகிவினை தீர்த்திடுமே.

வள்ளிநாயகியார் துதி.

தெள்ளு தமிழாற் சிறந்தடியேன் காதல்சொல்ல
வள்ளியம்மைத் தாயும் மனதிரக்கஞ் செய்திடுமே.

தெய்வநாயகியார் துதி.

நாவா லிசைந்தபுன்சொல் நாயடியேன் கூறுதற்குத்
தேவானைத் தாயார் திருக்கணருள் தந்திடுமே.

இலக்குமி துதி.

பண்புடைய வேலர்திருப் பாராட்டுக் காதல்சொல்லத்
தண்கமலப் பூமகளுந் தன்கருணை தந்திடுமே.

சரஸ்வதி துதி.

கதிரைக் குருபரனைக் கைதொழுது காதல்சொல்ல
மதுரக் கவிக்கிரச வாக்குதவும் நாமகளே.

திருவேல்.

பார்த்தெளியேன் சொன்னதமிழ்ப் பாவினுள்ள குற்றமெல்லாந்
தீர்த்திரக்கஞ் செய்யுந் திருக்கைவே லாயுதமே.

மயில் துதி

கற்றறியா மோடன் கனிந்துரைத்த புன்சொல்தனிற்
குற்றமெலாம் பார்த்தெடுத்துக் கொத்துமயில் வாகனமே.

சேவல் துதி.

வேளை தனிலுதவும் வேலர்திருக் காதல்சொல்லக்
கோழிக் கொடியறிந்து கூவிக்களித்திடுமே.

தேவர் துதி.

அனைத்துயிரை யும்புரக்கு மாறுமுகன் சேவடியை
மனத்திருத்து காதலெனில் வானவர்கொண்டாடுவரே.

காதலித்துத் தேவர்தொழுங் கந்தரது காதல்சொலப்
பூதலத்துத் தெய்வமெல்லாம் போந்துநன்மை தந்திடுமே.

அவையடக்கம்.

திருமால் மருமகனுஞ் செவ்வேளைப் பாடுதலாற்
பெரியோ ரிகழாமற் பேரறிவென் றெண்ணுவரே.

நூல்.

1 சீரின்ப மூர்த்தி தருஞ் செவ்வேளின் பாடல்தனைப்
பேரின்பக் காதலென்று பேருலகோர் பேசுவரே.

2 பெருவா சகமெனுமிப் பேரின்பக் காதல்தனைத்
திருவா சகமெனவுந் தேனெனவுஞ் செப்புவரே.

ஆரணஞ்சேர் தென்கதிரை யற்புதனைப் போற்றிசெய்து
காரணஞ்சேர் பேரின்பக் காதல்தனைக் கூறலுற்றேன்.

4 பிறந்தபிறப் பெல்லாநான் பேதலித்துச் சண்முகனை
மறந்து மறந்துபட்ட மாற்றமிங்கு சொல்லலுற்றேன்.

5 சென்ம மெடுத்தெடுத்துச் சென்றபிறப் பெல்லாநான்
கன்மவலை மூடிமிக்க கண்கலக்கப் பட்டுவிட்டேன்.

6 அன்பர்தொழுந் தென்கதிரை யாண்டவரைப் போற்றாமல்
வன்பாருந் துன்ப வலைக்குளகப் பட்டேனே.

7 கந்தமலர்த் தென்கதிரைக் கந்தரைநான் போற்றாமல்
பந்தவினை தந்ததொல்லைப் பாசத்திற் பட்டுவிட்டேன்.

8 திருந்துங் கதிரைமலைச் செவ்வேளைப் போற்றாமல்
வருந்தி வறுமையினால் வாட்டமிங்கு சொல்லலுற்றேன்.

9 விண்ணோர் தொழுங்கதிரை வேலவரைப் போற்றாமல்
மண்ணாசை கொண்டுலகில் வாழ்வை மதித்துவிட்டேன்.

10 தேவானை பங்கன் திருவடியைப் போற்றாமல்
மாபாவி யாகி வருநரகுக் காளானேன்.

11 காக்குங் கதிரைமலைக் கந்தனைநான் போற்றாமல்
நீர்க்குமிழி வாழ்வை நிலைபரமென் றெண்ணிவிட்டேன்.

12 நாயகமாந் தென்கதிரை நாதனைநான் போற்றாமல்
மாஞால வாழ்வில் மனஞ்சலித்து நின்றுவிட்டேன்.

13 திங்கள்முடி யோனுதவுஞ் செவ்வேளைப் போற்றாமல்
மங்கையர்கள் மாய வலையிலகப் பட்டுவிட்டேன்.

14 சிங்கார லங்காரச் செல்வனைநான் போற்றாமல்
வெங்காம வெள்ள விரகவலைப் பட்டுவிட்டேன்.

15 விண்ணோர் தொழுங்கதிரை வேலவரைப் போற்றாமல்
புண்ணாலழுந்தும் புழுக்கூட்டை நம்பிவிட்டேன்.

16 கானக் குறத்தி கணவனைநான் போற்றாமல்
ஈனமுற்ற சென்மத் திடரிலகப் பட்டுவிட்டேன்.

17 மஞ்சார் மலரழுக வள்ளிமண வாளனைநான்
நெஞ்சார வாழ்த்துகின்ற நேயத்தை விட்டுவிட்டேன்.

18 தேவர்தொழும் தென்கதிரைச் செவ்வேளைப் போற்றாமல்
தாவுகிர கப்பகையாற் றத்தளிக்கப் பட்டுவிட்டேன்.

19 குமர குருபரனைக் கும்பிட்டு வாழ்த்தாமல்
திமிரக் கொடும்பிணியாற் றேகமெலி வானேனே.

20 வீறுபெறுந் தென்கதிரை வேலவரைப் போற்றாமல்
நாறு புழுப்பொதிந்த நாயுடலை நம்பிவிட்டேன்.

21 மூவர் தொழுந் தென்கதிரை முருகனைப்பா ராட்டாமல்
தாவும் பலபிணியாற் றத்தளிக்கப் பட்டுவிட்டேன்.

22 தோத்திரஞ்செய் தாறுமுகத் தூயோனைப் போற்றாமல்
பித்தற் றுருத்திதனைப் பேணி வளர்த்துவிட்டேன்.

23 சித்திரவே லாயுதன்றன் சேவடியைப் போற்றாமல்
கத்துமறி வில்லாக் கரும்பறவை போலானேன்.

24 சீரேந்து தென்கதிரைச் செவ்வேளைப் போற்றாமல்
பார்வேந்தர் செய்யும் பருவிலக்குக் கஞ்சிவிட்டேன்.

25 தேவைக் கதிரைமலைச் செவ்வேளைப் போற்றாமல்
பாவப் புழுவுடலைப் பாவித் திருந்துவிட்டேன்.

26 வாயாரத் தென்கதிரை வள்ளலைப்பா ராட்டாமல்
தாயில்லாப் பிள்ளையைப்போற் றத்தளிக்கப் பட்டுவிட்டேன்

27 அருத்தியுடன் தென்கதிரை யண்ணலைப்பா ராட்டாமல்
துருத்திக் கிறைதேடித் தொல்லைவலைப் பட்டுவிட்டேன்.

28 வாழுங் கதிரைமலை வள்ளலைநான் போற்றாமல்
வேழம் புசித்த விளாங்கனிபோ லானேனே.

29 வீரமுற்ற சூரைவென்ற வேலவரைப் போற்றாமல்
நேரமற்று வீணாய் நெடுங்காலம் போக்கிவிட்டேன்.

30 தேசம் புகழ்கதிரைச் செவ்வேளைப் போற்றாமல்
ஆசையெனும் பாரவுட லஞ்சிக்கண் துஞ்சிவிட்டேன்.

31 சேர்ந்துசிறுத் தொண்டருடன் செவ்வேளைப் போற்றாமல்
பாந்தள்வாய்ப் பட்ட பசுந்தேரை போலனேன்.

32 மடலவிழும் பூங்கடம்ப மார்பனைப்பா ராட்டாமல்
விடமருந்து செங்கமலம் போலே மெலிவானேன்.

33 குன்றெறிந்த செவ்வேற் குமரனைப்பா ராட்டாமல்
கன்றிழந்த வாபோற் கதறிக் கலங்கிவிட்டேன்.

34 எங்கோன் கதிரைமலை யேந்தலைநான் போற்றாமல்
வெங்கணி ராகுதொட்ட வெண்கதிரைப் போலானேன்.

35 விரைகமழுந் தென்கதிரை வேலவரைப் போற்றாமல்
இரவலர்கள் சொற்பகைக்கு ஏங்கிமிகக் கெஞ்சிவிட்டேன்.

36 ஏற்றிக் கரங்குவித்து எங்கோவைப் போற்றாமல்
ஆற்றிற் றுரும்பா யலைந்துமெலி வானேனே.

37 வள்ளிமண வாளன் மலர்ப்பதத்தைப் போற்றாமல்
கொள்ளித் தலையிற் குறுகெறும்பு போலானேன்.

38 ஆறுமுகன் சேவடியை யன்பினுடன் போற்றாமல்
சூறைவழிப் பட்ட சுழல்சருகு போலானேன்.

39 கலைபயிலுந் தென்கதிரைக் கந்தனைப்பா ராட்டாமல்
உலையில் மெழுகாகி யுருகி யுருகிவிட்டேன்.

40 முத்திதருந் தென்கதிரை முருகனைப்பா ராட்டாமல்
பத்தியறி வில்லாப் படுபாவி யானேனே.

41 பழிகள் தலையணையாய்ப் பாதகங்கள் பஞ்சணையாய்
விழிகள் துயின்றயர்ந்து விட்டேன் சிலகாலம்.

42 அறத்தை விரும்பாமல் அறுமுகனைப் போற்றாமல்
மறத்தை மனத்திருத்தி வாழ்ந்தேன் சிலகாலம்.

43 விண்வாழ்வை நம்பி விரும்பியீடே றாமல்
மண்வாழ்வை நம்பி மகிழ்ந்தேன் சிலகாலம்.

44 பித்தாய்ப் பிதற்றிப் பெருந்தமிழா ராய்ந்தவர்போற்
கத்திக் கதறிக் கழித்தேன் சிலகாலம்.

45 மந்திரங்கள் தந்திரங்கள் மாயமருந் தானகள்ளத்
தந்திரங்கள் கற்றுச் சலித்தேன் சிலகாலம்.

46 கன்னல்வயற் றென்கதிரைக் கந்தனைப்பா ராட்டாமல்
அன்னதுண்டு யின்னதுண்டென்றுமென் றலைந்துவிட்டேன்.

47 மாயத் துருத்தி வளர்ப்பதற்கே யெண்ணமெண்ணிக்
காயக் கமம்பண்ணிக் கழித்தேன் சிலகாலம்.

48 எள்ளவுந் தர்ம மியற்றமன மில்லாமல்
கள்ளவினை மூடிவழி காணாமல் நின்றுவிட்டேன்.

49 தவிடு பகிரவிடாத் தான்மறுகி யாசைகொண்டு
கவடு பலபண்ணிக் கழித்தேன் சிலகாலம்.

50 வைப்பான தேவ வரம்பெல்லாந் தான்கடந்து
வொம்பாயம் பண்ணி யுலைந்தேன் சிலகாலம்.

51 ஆசையென்னுங் கல்லாலடைத்துநெஞ்சைப்பூட்டிவைத்துத்
தேசவா சாரமதாய்த் திரிந்தேன் சிலகாலம்.

52 புல்லறிவைக் கொண்டு புலைகொலையில் லாதவராய்
நல்லறிவை மீறி நடந்தேன் சிலகாலம்.

53 தீதகற்றுந் தென்கதிரைச் செவ்வேளைப் போற்றாமல்
பாதகத்துக் கன்னையர்போற் பாலளித்து வாழ்ந்திருந்தேன்

54 பேய்க்கோலங் கொண்டு பெருவாழ்வுக் கொப்புவித்து
நாய்க்கோல மாகி நடந்தேன் சிலகாலம்.

55 எத்திசையும் போற்றுகதி ரீசனைப்பா ராட்டாமல்
குத்திரங்கள் கற்றுக் குரைத்தேன் சிலகாலம்.

56 நலஞ்சேருந் தென்கதிரை நாயகனைப் போற்றாமல்
புலன்போம் வழிவழியே போனேன் சிலகாலம்.

57 பரனைப் பராபரையைப் பங்கயக்கண் ணனையுமைங்
கரனைச் சிறிதுமனங் காணாமல் நின்றுவிட்டேன்.

58 மறையை மறைபவரை மாதவத்தை வெண்ணீற்றை
முறையைத் திறம்பி மொழிந்தேன் சிலகாலம்.

59 தோயங் கனல்புவிவான் றொட்டவளி யாலெடுத்துக்
காயமிது மாயமெனக் கண்டுமின்னம் வேறுபட்டேன்

60 துஞ்சுவதுந் துஞ்சவுடல் சோருவதுந் துஞ்சவுயிர்
அஞ்சுவதுங் கண்டுமின்ன மாசைவலைப் பட்டுவிட்டேன்

61 ஆடுவதும் வீணா யலையவுடல் மண்ணரிக்கப்
போடுவதுங் கண்டுமின்னம் புத்திகெட்டு நின்றுவிட்டேன்

62 வாசலெல்லாஞ் சேர்த்தடைத்து வாய்பற்றி வையமிட்டுப்
பூசலெல்லாங் கண்டுமின்னம் புத்திகெட்டு நின்றுவிட்டேன்.

63 வாசக் கதிரைமலை வள்ளலைப்பா ராட்டாமல்
காயக்கடு வேடர்சொன்ன கட்டளையில் நின்றுவிட்டேன்.

64 கட்டிப் பிடித்திறுக்கிக் காவலிட்டு வாதபித்தம்
ஒட்டிக்கெடுப்பதுங்கண் டுள்ளறிந்து வேறுபட்டேன்.

65 கூடியிருந் துண்டுசுகி கொண்டகள்ளச் சண்டனைக்கண்
டோடுவதுங் கண்டுமின்ன முள்ளத்தி னின்றுவிட்டேன்

66 சுற்றெவரும் பார்த்திருக்கத் தோன்றாமல் மெள்ளவுயிர்
அற்றதையுங் கண்டுமின்ன மாசைவலைப் பட்டுவிட்டேன்.

67 காட்டில் நரியோடு கழுகுகரு நாய்விரும்பும்
ஒட்டை மலக்கூட்டை யுதவுமென்று நம்பிவிட்டேன்.

68 சலமும் பலநரம்புந் தங்குமுதி ரக்குடலும்
மலமும் பொதிந்தவிந்த மண்ணுடலை நம்பிவிட்டேன்.

69 காலன் விரும்புங் கடும்பாசந் தான்விரும்புஞ்
சூலம்விரும் புங்கள்ளச் சூதுடலை நம்பிவிட்டேன்.

70 நாய்விரும்பு மோரி நரிவிரும்பும் பாறுகொடி
பேய்விரும்பு மிவ்வுடலைப் பேணி வளர்த்துவிட்டேன்.

71 ஓங்கு படகேறி யுறுமறலி தண்டதற்கு
நீங்கவழி காணாமல் நின்றுதடு மாறிவிட்டேன்.

72 கந்தமலர்த் தென்கதிரைக் கந்தனைப்பா ராட்டாமல்
புந்தி விரிந்தலைந்து போனேனிக் காலமெல்லாம்.

73 மெய்யாருந் தென்கதிரை வேலவரைப் போற்றாமல்
ஐயையோ வீணா யலைந்தேனிக் காலமெல்லாம்.

74 கோலமெல்லாங் கெட்டுக் குலைந்துதடு மாறிநொந்து
காலமெல்லாம் வீணாய்க் கழித்துமனஞ் சலித்தேன்.

75 ஆளுநங் கதிரைமலை யற்புதனைப் போற்றாமல்
நாளெல்லாம் வீணாய் நலமற் றிருந்துவிட்டேன்.

76 ஆதுல னானவரு ளாண்டவரைப் போற்றாமல்
பாதக னானசென்மப் படுபாவி நானானேன்.

77 வாடினேன் தென்கதிரை வள்ளலைநான் போற்றாமல்
ஓடினே னோடி யுலைந்தே னுலகமெல்லாம்.

78 உலைந்தேன் கதிரைமலை யுத்தமனைப் போற்றாமல்
அலைந்தே னுலகமெல்லா மங்குமற்றே னிங்குமற்றேன்.

79 எதிராக மூவுலகி லிம்மைமறு மைக்குமிடங்
கதிர்காம மென்றுமனங் கண்டுதிடங் கொண்டேனே.

80 மதுரக் கவிக்கிசைய வாழ்த்துகதி ரீசருடை
கதிரைக் கிளியெனவுங் கண்டுதிடங் கொண்டேனே.

81 ஆரணங்கள் போற்றுமலை யன்பரையீ டேற்றுமலை
காரணங்கள் காட்டு கதிர்காம மாமலையே.

82 முத்தி கொடுக்குமலை மூவுலகும் போற்றுமலை
சித்திபொருந்துமலை தென்கதிரை மாமலையே.

83 மூவர்புகழ்ந் தேத்துமலை முப்பத்து முக்கோடி
தேவர்தொழு தேத்துமலை தென்கதிரை மாமலையே.

84 எந்த வுலகிலெல்லாம் ஏழைகளை யீடேற்றக்
கந்தவேள்வந்துறையுங் கதிர்காம மாமலையே.

85 தெள்ளு தமிழ்வளருந் தேவசந்தா னம்வளரும்
வள்ளிக்கொடிவளரும் வாழ்கதிரை மாமலையே.

86 பாவக் கொடியறுக்கும் பாவலரை யீடேற்றும்
தேவக் கிரிவளருந் தென்கதிரை மாமலையே.

87 மேவு மயில்வளரும் வேலா யுதம்வளருஞ்
சேவற் கொடிவளருந் தென்கதிரை மாமலையே.

88 விண்டலத்தோர் போற்றி வியந்து தினம் பூசைசெய்ய
மண்டலத்தோர் போற்றும் வளர்கதிரை மாமலையே.

89 தாலமெல்லா மோதுந் தலங்களெல்லாம் போற்றிசெய்யுங்
காலமெல்லா மோங்குங் கதிர்காம சந்நிதியே.

90 வேகச் சனிமுகடி வெங்கலியங் குற்றதிறற்
காகத் தொனிகேளாக் கதிர்காம சந்நிதியே.

91 அவலப் புலன்க ளடக்கியன்ப ரீடேறக்
கவலைத்[illegible]ர் கொல்லுங் கதிர்காம சந்நிதியே.

92 முத்திதருந் தென்கதிரை முருகர்மலர்ச் சேவடியைச்
சித்தத் திருத்திமனந் தேற்றியறிந் தேனிலையே.

93 வானுந்து தென்கதிரை வள்ளலைநான் போற்றிசெய்து
ஆனந்தத் தேனைமிக யள்ளியுட்கொண் டேனிலையே.

94 ஆறெழுத்தை நேசித் தகத்திருத்திச் சேவைசெய்து
கூறமிர்த பாலைக் குடிக்கவறிந் தேனிலையே.

95 மருவித் துதித்தமரர் வாழ்த்துகதி ராபுரியைத்
தெரிசித்துத் தெண்டனிடச் சென்மெடுத் தேனிலையே.

96 மாணிக்கக் கெங்கைதனில் மருவிநீ ராடியுள்ளங்
காணிக்கை கொண்டிறைஞ்சக் காயமெடுத் தேனிலையே.

97 தெண்டனிட்டுப் பன்னிருகைச் செவ்வே டிருப்பதியைக்
கண்டுதெரி சித்துக் கசிந்துருகி னேனிலையே.

98 வாழுங் கதிரைமலை வள்ளலைநான் போற்றிசெய்து
நீழும் பவக்கடலை நீக்கவறிந் தேனிலையே.

99 தக்கபுகழ்த் தென்கதிரைச் சண்முகனைப் போற்றிசெய்து
மிக்கவினைக் கட்டறுக்கு மேன்மையறிந் தேனிலையே.

100 சொல்லற் றிரவுபகற் றூயோனைப் போற்றிசெய்து
செல்வத் தினிதிருக்கச் செய்தியறிந் தேனிலையே.

101 அன்ன மிரவோர்கட் கருத்திக் கதிரைநகர்ச்
சந்நிதியை நோக்கித் தவசுபண்ணி னேனிலையே.

102 சண்டன் கொடுங்காலன் தண்டமுடன் வந்தணுகி
யண்டி யுயிர்கவர்போ தானதுணை காணேனே.

103 வெட்டும் பகடேறி வெங்கூற்றன் வந்துயிரைக்
கட்டும் பொழுதுவழி காணுமிடங்காணேனே.

104 காலனைக் கண்டஞ்சிக் கலங்கிவிழு மந்நேரம்
வேலு மயிலுமல்லால் வேறுதுணை காணேனே.

105 நாடினே னுன்கருணை நம்பினே னுன்பதத்தைத்
தேடினே னுன்பதியைத் தென்கதிரை வேலோனே.

106 நொந்தடியேன் சிந்தை நடங்கும்போ தென்முன்னே
வந்துதவ வேணுமினி வாழ்கதிரை வேலோனே.

107 காக்கப் பரமுமக்குக் காத்திரட்சித் தென்குறையைத்
தீர்க்கக் கடனுனக்குத் தென்கதிரை வேலோனே.

108 விண்கொண்ட தேவர்கட்கும் மேதினியி லுள்ளவர்க்கும்
கண்கண்ட தெய்வங் கதிர்காம வேலோனே.

109 பொய்கண்ட கள்ளம் பொருந்துங் கலியுகத்தில்
மெய்கண்ட தெய்வம் விளங்குகதிர் வேலோனே.

110 வாச்சியமாம் மாமறைக்கு மாமுனிவர் தங்களுக்கும்
காட்சிதந்து வீடேற்றுங் கதிர்காமவேலோனே.

111 ஆரணமா யாரணத்துக் கப்பாலுக் கப்பாலாய்க்
காரணமாய் நிற்பதுவுங் கதிர்காம வேலவரே.

112 வித்தாய் விளங்கொளியாய் வேதமுமாய்க் காலமெல்லாஞ்
சித்தாய் நிறைந்ததுவுந் தென்கதிரை வேலவரே.

113 முச்சுடராய் முத்தொழிலாய் முக்குணமாய் மூவருமாய்
மெய்ச்சுடராய் நிற்பதுவும் வீரவடி வேலவரே.

114 எட்டெழுத்தா யஞ்செழுத்தா யீரெழுத்தாய்ப் பேரெழுத்தாய்
வட்டெழுத்தாய் நிற்பதுவும் வன்னவடி வேலோனே.

115 அருவாய்ப் பலவுருவா யற்புதமாய்த் தற்பரமாய்க்
குருவாகி நிற்பதுவுங் கோலவடி வேலவரே.

116 பண்ணிசையாய்ப் பேரொளியாய்ப் பாருயிருக் காதரவாய்க்
கண்ணொளியாய் நிற்பதுவுங் கதிர்காம வேலவரே.

117 மண்டலமாய்த் தண்புனலாய் வானகமாய் மாருதமாய்
விண்டலமாய் நிற்பதுவும் வீரவடி வேலவரே.

118 தக்கபுகழ் வாசமுமாய்த் தானொடுக்கந் தோற்றமுமாய்
மிக்ககதிர் காமநகர் வீற்றிருக்கும் வேலவரே.

119 வெள்ளிக் கதிரைமலை வீற்றிருந் தெவ்வுயிர்க்கும்
எள்ளுக்கு ளெண்ணெய்போ லிருந்தருளும் வேலவரே.

120 அணுவுக் கணுவா யகண்டபரி பூரணமாய்
நினைவுக் கணுவாகி நிற்பதுவும் வேலவரே.

121 மந்திரமாய் ஞான மருந்தாய் மறைக்கொழுந்தாய்
சிந்துரமாய் ஞாலஞ் சிறப்பதுவும் வேலவரே.

122 ஒளியாய் வெளியுருவா யுற்பரமாய் நிற்பரமாய்
வெளியாய் நிறைந்ததுவும் வீரவடி வேலவரே.

123 எடுத்த வுலகமெல்லா மெள்ளிருக்க நீக்கமின்றி
யடுத்து நிறைந்ததுவு மாறுமுக வேலோனே.

124 காய்ச்சியபால் நெய்போற் கலந்துகலந்தேகரந்து
வாச்சியமாய் நிற்பதுவும் வன்னவடிவேலோனே

125 தானு யுலகமெல்லாந் தன்செயலே தத்துவமாய்
ஆன திருவிளையாட் டாடுவதும் வேலவரே.

126 புங்கவர்க ளெண்ணரிய பூச்சக்ர வாளமெல்லாம்
செங்கோல் நடத்துவதுந் தென்கதிரை வேலவரே.

127 அல்ல லுறும லருந்தவரை யீடேற்றிப்
பல்லுயிருக் கெல்லாப் படியளக்கும் வேலவரே.

128 வீற்றிருக்குந் தொண்டருக்கு மெய்ஞ்ஞானத் தேவவள்ளி
தேற்றியாட் கொள்ளுவதுந் தென்கதிரை வேலவரே.

129 குருடர் விழிதெரியக் கூன்முடவர் கால்வழங்க
மருட ரிருள்தீர வரங்கொடுக்கும் வேலவரே.

130 கூனர் செவிடூமர் கொலைஞர்பிணி யாளரங்கத்
தூனர் பிரமகத்தி துயரறுக்கும் வேலவரே.

131 துலங்கு மறைப்பொருளைச் சொல்லாத நான்முகனை
விலங்கிலிட்டு வைத்ததுவும் வீரவடி வேலவரே.

132 சிந்தைக்கு மெட்டாத தேவ மறைப்பொருளைத்
தந்தைக் குபதேசஞ் சாற்றுவதும் வேலவரே.

133 தானவர்க டாளைத் தலைமையறுத் தம்பலத்தில்
வானவரை மீட்டதுவும் வாழ்கதிரை வேலவரே.

134 பன்னுதமிழ் வாணர் பரதேசிக் காதரவாய்
அன்னக் கொடிவீசி யமுதளிக்கும் வேலவரே.

135 பாடுவது முன்செயல்தான் பல்லுயி ரெலாமியங்கி
யாடுவது முன்செயல்காண் ஆறுமுக வேலவரே.

136 எடுப்பதுவு முன்செயலே யிலையென்று தேற்பவர்க்குக்
கொடுப்பதுவு முன்செயல்காண் கோலவடி வேலவரே.

137 அளிப்பதுவு முன்செயல்கா ணையமேற் றோர்க்குமின்றி
விளிப்பதுவு முன்செயல்காண் வீரவடி வேலவரே.

138 காட்டுவது முன்செயல்காண் காரணமு முன்செயல்போற்
கூட்டுவது முன்செயல்காண் கோலவடி வேலவரே.

139 முத்தொழிலும் நீகருணை மூவுலகும் நீகருணைத்
தத்துவமும் நீகருணைச் சண்முகவே லாயுதமே.

140 விழித்தயனென் சென்னிதனில் வீண்கீற்றுக் கீறினதை
அழித்தெழுத வேணுமினி ஆறுமுகவேலோனே.

141 துன்பவெழுத் தெல்லாந் துடைத்தழித்தென் சென்னியிலே
யின்பவெழுத் தாய்நீ யெழுதுகதிர் வேலோனே.

142 அலையு மெழுத்தெல்லா மழித்தினிநா னீடேற
வலையா வெழுத்தெழுது மாறுமுக வேலோனே.

143 வியக்கு மெழுத்தெல்லாம் விரித்துத் துடைத்தளித்து
நயக்கு மெழுத்தெழுதும் நற்கதிரை வேலோனே.

144 மந்திரமுந் தேவு மருந்துமென தாருயிருஞ்
சிந்தையும் நீயெனக்குத் தென்கதிரை வேலோனே.

145 காலன் வருங்கோலங் கண்டஞ்சு மப்பொழுதும்
வேலுக் கடைக்கலங்காண் வெற்றிவடி வேலோனே.

146 ஆறிரண்டு தோளு மழகியவே லாயுதமும்
ஏறுமயில் வாகனமு மென்ற னுயிர்த்துணையே.

147 பற்றுப் பகைகளெல்லாம் பற்றறுக்கு முன்னுடைய
வெற்றிவே லாயுதமும் வீரமயிலுந்துணையே.

148 வேகமுள்ள தூதர்வரும் வேளையில்வே லாயுதமும்
தோகைமயில் வாகனமும் துணையாய் வெளிப்படுமே.

149 சாந்தனையுங் காயந் தளம்பாமுற் றுரணியில்
வேந்தர்பகை சூழாமல் வேலுக் கடைக்கலமே.

150 கலியாற் பிணியாற் கடுங்கோளின் வெம்பகையால்
மெலியாமற் றென்கதிரை வேலுக் கடைக்கலமே.

151 படையாற் கொடுவினையாற் பல்பகையாற் பல்லுயிரால்
மிடியால் மெலியாமல் வேலுக் கடைக்கலமே.

152 தேனே மதுரமொழித் தெள்ளமுதே தேவர்தொழும்
மானே மரகதமே வள்ளியம்மை நாயகியே.

153 கான்மேவு சோலைக் கதிரைமலைக் கற்புதமே
மானின் றெடுத்தகுற வள்ளியம்மை நாயகியே.

154 பார்புரக்கும் வேலரிடப் பாகமதில் வீற்றிருக்கும்
வார்புரக்குங் கும்பதனா வள்ளியம்மை நாயகியே.

155 விழிக்கும் பொருளெவைக்கு வேலவர்க்கு முள்ளவர்க்கும்
வழிக்குத் துணையெனக்கு வள்ளியம்மைத் தாயாரே.

156 அறந்தவமில் லாதபொல்லா வாப்பாச னென்றனைநீ
மறந்து விடாதையம்மா வள்ளியம்மைத் தாயாரே.

157 கனதுயரந் துன்பக் கவலையெல்லாந் தீரவுந்தன்
மனதிரங்க வேணுமினி வள்ளியம்மைத் தாயாரே.

158 திருந்தும் புவியிற் சனங்களையீ டேற்றுகின்ற
மருந்துன் னிரக்கமம்மா வள்ளியம்மைத் தாயாரே.

159 சற்றிரக்கம் நீயள்ளித் தாராமற் றள்ளிவிட்டால்
மற்றிரங்க யாருமுண்டோ வள்ளியம்மைத் தாயாரே.

160 நெஞ்சமருள் கொண்டுலையும் நிட்டூரம் நீதியில்லா
வஞ்சனெனைக் காருமம்மா வள்ளியம்மைத் தாயாரே.

161 தஞ்சமெனக்கினியுன் தாளிணையே தஞ்சமம்மா
மஞ்சார் குழலாளே வள்ளியம்மை நாயகமே.

162 ஊத்தைச் சடலப்பிணியா லூறுபடா வண்ணமெனைப்
பார்த்திரக்கஞ் செய்யுமம்மா வள்ளியம்மை நாயகமே.

163 தொலையா மனக்கவலைத் துன்பமினித் தீர்வதற்குன்
மலரடியைத் தெண்டனிட்டேன் வள்ளியம்மை நாயகமே.

164 என் தாயும் நீயேதா னென்னுயிர்க்கா தாரமும் நீ
வந்தா தரவுசெய்யும் வள்ளியம்மை நாயகமே.

165 வான்மருவு தேவகுல மாமணியே மாதவமே
தேனனைய மென்மொழியே தெய்வயானைத் தாயாரே.

166 பாருமம்மா நீயிரக்கம் பார்த்தெனது துன்பமெல்லாம்
தீருமம்மா தென்கதிரைத் தெய்வயானைத் தாயாரே.

167 இரும்பனைய நெஞ்சனியா னீடேற நீகடைக்கண்
திரும்புமம்மா தென்கதிரைத் தெய்வயானைத் தாயாரே.

168 தரிக்கும் புகழ்க்கதிரைச் சண்முகன்பா தஞ்சேர்ந்
திருக்கு மணிமயிலே தெய்வயானைத் தாயாரே.

169 வருந்தும் பிணிகளெல்லா மாற்றியென்னைக் காருமம்மா
திருந்துங் கதிரைமலைத் தெய்வயானைத் தாயாரே.

170 ஏர்கொடுத்து நன்மைகொடுத் தின்னலற வொண்கதியின்
சீர்கொடுக்குந் தொண்டருக்குத் தெய்வயானைத் தாயாரே.

171 கன்ம வழிமறித்துக் காவலிட்டுத் தாபரித்து
நன்மை வழியாக்கி நடத்தும்வே லாயுதமே.

172 குறமான் கொழுநன் குரைகழற்செந் தாமரைநான்
மறவா திருக்க வரந்தரும்வே லாயுதமே.

173 மண்டலம் நீக்கிவெளி வானடங்கு மப்பொழுது
கண்டஞ்ச லென்றென்னைக் காக்கும்வே லாயுதமே.

174 கொலையாய் நமனுயிரைக் கொள்ளைகொள்ளு மப்பொழுது
இலையாய் முடியுமுன்னே யிடாடும்வே லாயுதமே.

175 பாவற் கொடியைப் படராமல் வேரறுத்துக்
காவற் குடிலைவைத்துக் காக்கும்வே லாயுதமே.

176 அருக்கன் பதிகுகன்மா லந்தணன்வெஞ் சீற்றமுடன்
நெருக்கும் பகைகளெல்லாம் நீக்கும்வே லாயுதமே.

177 வெள்ளி சனிராகு மிக்ககொடுங் கேதிவைகள்
கள்ளஞ் செயும்பகையைக் காக்கும்வே லாயுதமே.

178 கன்மவினை பூண்டுவழி கால்கட்டாய்ப் பின்தொடரும்
சென்ம வியாதியெல்லாந் தீர்க்கும்வே லாயுதமே.

179 பொருந்து முடலெடுத்துப் பூதலத்தி லாருயிர்க்கும்
வருந்து மிடுக்கணெல்லா மாற்றும்வே லாயுதமே.

180 சுற்றுகிர கப்பகைகள் சூழ்ந்துவரு வேளையிலே
மற்றும் புரட்சியெல்லா மாற்றும்வே லாயுதமே.

181 இலங்குசனி யட்டமத்தி லேழரையில் வந்தாலும்
கலங்காம லென்றுமென்னைக் காக்கும்வே லாயுதமே.

182 விண்ணாட்டிற் காயம் வெண்கலத்தி லென்மீதிற்
கண்ணாட்டம் பாராமற் காக்கும்வே லாயுதமே.

183 பேரார் புவியிற் பிறந்துழலு மானிடர்க்குத்
தீரா வியாதியெல்லாந் தீர்க்கும்வே லாயுதமே.

184 அலகை பரிபிரதி யானபெல்லி சூனியங்கள்
கலிகள் நலியாமற் காக்கும்வே லாயுதமே.

185 கலைதேரு நாமகளுங் கஞ்சமலர் மாதுமென்முன்
நிலையாய்க் குடியிருக்க நிறுத்தும்வே லாயுதமே.

186 தன்னை மறந்தாலுந் தவத்தைமறந் தாலுமினி
யுன்னை மறவே னுயர்வடிவே லாயுதமே.

187 கோலம் பெறுபதினோர் கோடி யுருத்திரர்கள்
சீலம் பெறுவடிவாய்ச் சேர்ந்த வேலாயுதமே.

188 பாரக் கிரவுஞ்சப் பருவரைகள் தூளிபடச்
சூரைப் பிளந்து தொலைத்தவே லாயுதமே.

189 அரனுந் திருமாலு மயன்வச்சி ராயுதனும்
வரமார் விபுதர்களு மாற்றியவே லாயுதமே.

190 பரமன் சூலாயுதமும் பங்கயன் தெண்டாயுதமும்
வரமால்சக் ராயுதமு மாறும்வே லாயுதமே.

191 தீயகொடும் பாவியும்யான் செப்பியவிண் ணப்பமதைத்
தூயவடி வேலவர்முன் சொல்லுமயில் வாகனமே.

192 தங்கு மிரக்கந் தருசமயம் பார்த்திருந்து
தொங்க லொதுக்கி மெல்லச் சொல்லுமயில் வாகனமே.

193 துணிந்து மதர்ப்பாகச் சொல்லாதே வேலர்முன்போய்ப்
பணிந்து தொழுதுசொல்லும்பச்சைமயில் வாகனமே.

194 அழுதழுது நானுரைத்த வல்லலெல்லாம் வேலவர்க்குத்
தொழுதுநின்று மெல்லமெல்லச் சொல்லுமயில் வாகனமே.

195 காதலித்துப் பூதலத்திற் கன்மவினைக் கூடெடுத்துப்
பேதலித்தே னென்றுசொல்லிப் பேசுமயில் வாகனமே.

196 துருத்தி யெடுத்துழலுந் துன்பமிது தாங்கவொண்ணாப்
பெருத்தசுமைப் பாரமென்று பேசுமயில் வாகனமே.

197 இறக்கப் படுமாவா லெய்திமெலி வுற்றடியேன்
துளக்கப் படுங்கதையைச் சொல்லுமயில் வாகனமே.

198 காரென்று சொல்லு கடைபோகக் காத்திரக்கம்
பாரென்று சொல்லுமினிப் பச்சைமயில் வாகனமே.

199 விழித்துன்பக் கீற்றெழுத்தை வேலர்திருக் காலாலே
யழித்தெழுத வேணுமென்று அறையுமயில் வாகனமே.

200 நின்றாடி யாடி நினைத்தொதுங்கி வேலருடன்
மன்றாடிச் சொல்லிவிடும் வன்னமயில் வாகனமே.

201 பாரமிந்தத் துன்பம் படமுடியா தென்றுசொல்லிச்
சூரைவென்ற வேலருடன் சொல்லுமயில் வாகனமே.

202 அல்லற் படுங்கவலை யாறமனத் துன்பமெல்லாஞ்
சொல்லிமுடி யாதெனவுஞ் சொல்லுமயில் வாகனமே.

203 காத்தருள வேணுங் கலிவறுமைத் துன்பமெல்லாந்
தீர்த்தருள வேணுமென்று செப்புமயில் வாகனமே.

204 மறைதுதிக்குந் தென்கதிரை வள்ளிவிழியென் மனத்திற்
குறைதவிர்க்க வேணுமின்னங் கூறுமயில் வாகனமே.

205 வேந்த ரிடுக்கண் மிகுபயமா யஞ்சியஞ்சிச்
சோர்ந்து தயங்குவதுஞ் சொல்லுமயில் வாகனமே.

206 தொண்டுதொட்டு ஆறுமுகன் தூயமதன் சேவைசெய்து
தெண்டனிட்டே னென்றுதிடஞ் செப்புமயில் வாகனமே.

207 இன்பப் படுவதல்லா லெய்திமெலி வுற்றடியேன்
துன்பப் படுவதையுஞ் சொல்லுமயில் வாகனமே.

208 வகைவகையாய் நானுரைத்த வாசகத்தை வேலவர்க்குத்
தொகையாகச் சொல்லிவிடுந் தோகைமயில் வாகனமே.

209 சண்டன் வரும்பொழுது சண்முகனைத் தெண்டனிட்டு
கொண்டுவர வேணுமினிக் கோலமயில் வாகனமே.

210 தாவுவினை மூடாமற் சஞ்சலமிஞ் சாமலெனை
மேவுசிற காலொதுக்கும் வீரமயில் வாகனமே.

211 வீறிட்ட சென்மமெல்லா மேலிட்டு முன்வினையைக்
கூறிட்டெடுத்தெடுத்துக் கொத்துமயில் வாகனமே.

212 பாரவினைத் துன்பம் படமுடியா தென்றுசொல்லிச்
சூரைவென்ற வேலருடன் சொல்லுமயில் வாகனமே.

213 பாரத் தலங்கள் பருவரைகள் தூள்படுத்தும்
வீரதத் துவம்பொருந்தும் வெற்றிமயில் வாகனமே.

214 வருமிடப வாகனமும் வளருமன்ன வாகனமும்
பொருகடக வாகனமும் போற்றுமயில் வாகனமே.

215 மயில்வாகன முரைத்த வாசகத்தைத் தான்கேட்டு
மயில்வேல ரென்குறைதீர்த் தாண்டடிமைக் கொண்டாரே

216 இரங்கந் தருங்கதிரை யெங்கோனைப் போற்றிசெய்து
கரக்கும் பெரும்பிறவிக் கடலைக் கடந்துவிட்டேன்.

217 கதிக்குங் கதிரைமலைக் கந்தரைநான் போற்றிசெய்து
சதிக்கு மியமதண்டம் தட்டி விலகிவிட்டேன்.

218 சித்திக்கு மெய்ஞ்ஞானச்செவ்வேளைப் போற்றிசெய்து
முத்திக் கரைக்கேணி முன்னிறுத்திக் கொண்டேனே.

219 கைகுவித்துப்பன்னிருதோட்கந்தரைநான்போற்றிசெய்தே
யைவரையுங் கட்டிமறித் தாணையிட்டுக் கொண்டேனே.

220 கட்டிய முன்வினையைக் காஞ்சூரகப் புற்றையெல்லாம்
வெட்டிவெளி யாக்கிவழி வேறே திருப்பிவிட்டேன்.

221 இன்பமுடன் றென்கதிரை யெங்கோனைப் போற்றிசெய்து
துன்பமெல்லாந் தீர்த்துச் சுகம்பெற் றிருந்தேனே.

222 கொம்மை முலைவள்ளி கொழுநனைநான் போற்றிசெய்து
இம்மை மறுமைக்கு மினியசுகம் பெற்றேனே.

223 குன்றெறிந்த வேலோய்நின் கோலமலர்ச் சேவடிகள்
என்றுமற வாம லிருக்கவரந் தாராயோ.

224 நிருமித் தடிமையெல்லாம் நிட்டூர னெந்தனுள்ளம்
பருவப் பழமாய்ப் பழுக்கவரந்தருவாய்.

225 இப்பிறப்பிற் சென்மமொழிந் தெப்பிறப்பிற் போனாலும்
அப்பிறப்பு முன்னடிமை யாக வரந்தருவாய்.

226 மிடிமைத் துயரால் மெலியாம லெப்பொழுதும்
அடிமைக் குடியாக வாண்டிரக்கஞ் செய்வாயே.

ஸ்டான்லி பிரஸ், நிர். 63, மலிபான் தெரு, கொழும்பு.

ஸ்தோத்திரத்திரட்டு.

புதிய பதிப்பு

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், திருமந்திரம், பதினோராந்திருமுறை, திருமொழி, கந்தரலங்காரம், பட்டினத்தார் பாடல், இராமலிங்கசுவாமி பாடல் முதலியவற்றினின்றும் திரட்டிய அரிய தோத்திரப்பாக்களும் விநாயகரகவல், கந்தர்சஷ்டி கவசம், திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம் முழுவதும்,

சுருக்கமான ஆலயதரிசன விதியும் அடங்கியுள்ளது.

அழகிய படங்களுடன்

நேர்த்தியான பைண்ட் செய்யப்பெற்றது.

விலை சதம் 30.

இந்துகலாபிவிருத்திச் சங்கம

ஜிந்துப்பிட்டித் தெரு,

கொழும்பு.

ஸ்டான்லி பிரஸ், கொழும்பு